வேளாங்கண்ணியில் வெளிப்பாளையம் கூட்டுறவு பால் சொசைட்டி கடையில் ஆவின் ... றது
விற்பனையை பால்வளத்துறை அமைச்சர் சுந்தரம் துவக்கி வைக்கிறார். (ம... கை
எம்.எல்.ஏ., நிஜாமுதீன் பெற்றுக் கொண்டார். அருகில் திருவாரூர் ... ல்
உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க பொது மேலாளர் ராஜேந்...

தினமலர் திருச்சி 26-5-98 7

## மெலட்டூர் பாகவத மேளா

# உள்ளத்தை உருக்கிய அரிச்சந்திரா நாடகம்

மெலட்டூர் பாகவத மேளாவில் அரிச்சந்திரா இசை-நாட்டிய நாடகம் இரண்டு நாட்களுக்கு தொடர்ந்து நடைபெற்றது. முதல் நாள் ஸ்ரீகாந் சந்திரமதி வேடம் அணிந்து உள்ளத்தை கொள்ளை கொண்டார். இரண்டாம் நாள் அதன் தொடர்ச்சியாக நடைபெற்ற இரண்டாம் பாகம் அரிச்சந்திரா நாடகத்தில் இக்குழுவின் தலைவர் துபாய் நடராஜன் சந்திரமதி வேடம் தரித்து உள்ளத்தை உருகச் செய்தார். நடராஜனின் நாற்பது ஆண்டு கால அனுபவம் நன்கு புலப்பட்டது. அவர் ஒரு மிகச்சிறந்த கலைஞர். நடராஜனுக்கு கலைமாமணி விருது வழங்கப்பட்டு விட்டதாம். ஆனால், ஏன் இன்னமும் பத்மஸ்ரீ விருது வழங்கப்படவில்லை என்று தெரியவில்லை. அவ்விருதை பெறுவதற்கு நடராஜன் முற்றிலும் தகுதி வாய்ந்தவரே.

அரிச்சந்திரா நாடகத்தில் நடிப்பு, நாட்டியம், இசை ஆகிய மூன்று அம்சங்களுமே சிறப்பாக இருந்தன. சந்திரமதி வேடமணிந்த நடராஜனும், அரிச்சந்திரன் வேடம் அணிந்த அவரது சகோதரர் குமாரும், மயானக் காட்சியில் பார்வையாளர்களை அழ வைத்து விட்டனர். அதற்கு முன்பாக இடம் பெற்ற லோகுதாசனின் சடலத்தைக் கண்ட சந்திரமதி விழுந்து புரண்டு அழும் காட்சியில் நடராஜன் நடிப்பு வெறும் நடிப்பாக இல்லை. உண்மையிலேயே புத்திர சோகம் ஏற்பட்ட தாயைப் போல் துடிதுடித்தார். நடராஜனையும், அவரது சகோதரரையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

திருவையாறு சகோதரர்கள் வெங்கடேசனும், லஷ்மி நரசிம்மனும் அரிச்சந்திரா பாகம் ஒன்றிலும், இரண்டிலும் இசைப் பிரிவில் சிறிதும் தொய்வு இல்லாமல் பார்த்துக் கொண்டனர். இவர்கள் பாடிய பாடல்கள் எல்லாமே அருமை. அவை ஒவ்வொன்றையும் ராகங்களுடன் வரிசைக் கிரமத்தில் பட்டியலிட்டு எழுத பக்கங்கள் போதாது. எனினும் இரண்டாம் பாகத்தில் புன்னாகவராளி ராகத்தில் 'இந்த காசி வச்சஹ இண்டி பனுலு ஹெத்சுகா' என்னும் பாடலும் இவ்வரிகள் திரும்பத் திரும்பப் பாடப்பட்டபோது நடராஜன் செய்த சஞ்சாரிபாவங்களும் அன்றைய நிகழ்ச்சியின் ஹைலைட். மேலே குறிப்பிட்ட இவ்வரிகளை திருவையாறு சகோதரர்கள் குறைந்தது 60 முறையாவது பாடியிருப்பார்கள். அதை முடித்துக் கொண்டு அவர்கள் மேலே பாட ஆரம்பித்ததும் இன்னும் ஒரு 30 முறையாவது இவர்கள் இதே வரிகளைப் பாடமாட்டார்களா என்று தோன்றியது. சந்திரமதி வீட்டு வேலைகளைச் செய்வது போன்று சஞ்சாரியில் செய்து காட்டிய காட்சியில் நடராஜனிடம் பத்மா சுப்ரமணியத்தின் பாதிப்பு நிறையவே காணப்பட்டது.

நவரத்னஹாரம்பு (சிந்து பைரவி), பாடிய முதியவர் வீரராகவன் இந்த வயதிலேயே இப்படிப் பாடினால் அவரின் சிறு வயதில் எப்படிப் பாடியிருப்பார் என்று என்னால் கற்பனை கூட செய்து பார்க்க முடியவில்லை. தாரஸ் தாயி தைவதம் வரை சர்வ சாதாரணமாகப் பேசும் சாரீரம் அவருக்கு. நெல்லை பாலாஜி மிருதங்கம் பளிச். நிகழ்ச்சியின் வெற்றிக்கு மிருதங்கம் துணை புரிந்தது. வெங்கடேச பிரசாத் புல்லாங்குழல் ஓ.கே. ஆண்டார்கோயில் துரை வயலின்.

—ஹரிகேசநல்லூர் வெங்கட்ராமன்.

## சென்னை பல்கலை.,யில் புதிய துறை

சென்னை, மே 25—

சென்னை பல்கலைக்கழகத்தில் 60க்கும் மேற்பட்ட துறைகளில் பட்டப்படிப்புகள் உள்ளன. தமிழ் ஆய்வுத் துறையும் ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் 'தற்காலத் தமிழ் இலக்கியத்துறை' என்ற புதிய துறை ஒன்றை சென்னைப் பல்கலைக்கழகம் துவக்கியுள்ளது.

கப்பலுக்கு

கலங்கரை விளக்கம் வழிகாட்டி!